[1981 ஏப்ரல் 4

தீப்பெட்டிகள் தயாரிப்பதற்குத் தேவையான காகித ஆலை அமைக்கும் திட்டம்.

*வினா எண். 634— திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தீப்பெட்டிக்குத் தேவையான காகிதங்களை தயாரிக்கும் தொழிற்சாலை துவங்க தமிழக அரசிடம் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இது பற்றிய விவரம் என்ன?

(இ) நெல்லை மாவட்டத்தில் துவங்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: (அ) ஆம்.

(ஆ) மற்றும் (இ) சாத்தூரிலுள்ள தீப்பெட்டித் தொழிற் கூட்டுறவுச் சங்கங்களின் கூட்டமைப்பு ரூ. 120 இலட்சம் செலவில் சிறிய காகித ஆலை நிறுவ அனுமதி கேட்டுள்ளது. இத் திட்டத்திற்கு கீழ்க்காணும் அரசு உதவி தேவைப்படுகிறது:—

(1) அரசு பங்கு மூலதனம் ரூ. 5 இலட்சம்.

(2) ஒரு உதவித் தொழில் வணிக இயக்குநர்; ரூ. 0.11 இலட்சம்; இத்திட்டத்தை 1981-82 ஆம் ஆண்டிற்கான இரண்டாம் பாகப் பணிகளின் கீழ் கொண்டுவர முடிவு செய்யப்பட்டு உதவித் தொகையும் 1981—82 ஆம் ஆண்டிற்குரிய வரவு-செலவுத் திட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது. வரவு-செலவுத் திட்டத்திற்கு சட்ட மன்றம் ஒப்புதல் அளித்த பிறகு இத்திட்டம் அமுல் செய்யப்படும். துவங்க வேண்டிய இடம் ஆய்வில் உள்ளது.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: ஏற்கெனவே இந்தத் திட்டத்திற்கான அனுமதிக்கு ஏற்பாடு செய்யப்பட்டுக் கொண்டிருக்கிறது என்று சொன்னார்கள். நெல்லை மாவட்டத்தில் கோவில்பட்டி, கழுகுமலை சுற்றுவட்டாரங்களில் தீப்பெட்டித் தொழிற்சாலைகள் அதிகமாக இருக்கின்றன. ஆகவே கோயில்பட்டியை மையமாக வைத்து தயாரிக்கப்படுகிற தொழிற்சாலை ஒன்றை கூடுதலாகத் துவங்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: தீப்பெட்டித் தொழிற்சாலைக்கு காகித ஆலையை எங்கு நிர்ணயம் செய்வது என்பதைப் பற்றி அரசாங்கம் இன்னும் முடிவு செய்யவில்லை. ஆனால் எங்கு அதற்குத் தேவையான மூலப்பொருள்கள், வைக்கோலும் தேவையான தண்ணீரும் கிடைக்கிற ஆற்றுப் படுகை இருக்கிறதோ அந்தப் பகுதியை ஆராய்ந்து அப்போது முடிவு எடுக்கப்படும்.